**செய்தி வெளியீடு எண் : 1285** **நாள் : 30.06.2023**

**செய்தி வெளியிடு**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னையில் 17 இடங்களில் 2023 ஜூலை 01–ந் தேதி முதல் ஜூலை மாதம் 25–ந்தேதி வரை முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள்.**

**இன்று (30.06.2023) – ந்தேதி சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள்தொடக்க விழா நடைபெற்றது. இந்த விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள்முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளைத்தொடங்கி வைத்தார்கள்.**

முதலமைச்சர் கோப்பை –2023 மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தொடக்க விழா 2023 ஜூன் மாதம் 30 ஆம் தேதி அன்று சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது.

விழாவில் 38 மாவட்டங்களை சேர்ந்தவீரர்–வீராங்கனைகளின் அணி வகுப்பு நடைபெற்றது.ஒலிம்பிக் தடகள வீராங்கனை செல்வி.ரேவதி மற்றும் சர்வதேசவாலிபால்வீரர் வைஷ்ணவ் ஆகியோர் முதலமைச்சர் கோப்பைக்கான சுடரினை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்வழங்கினார்கள்.

**அதனை தொடர்ந்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள்** முதலமைச்சர் கோப்பைக்கான **சுடரினை ஏற்றி வைத்து போட்டிகளை தொடங்கி வைத்தார்.**

மேலும் ஒலிம்பிக் வீராங்கனை செல்வி. சுபா அவர்கள் தலைமையில்விளையாட்டு உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது. விழாவில்கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், முனைவர் அதுல்ய மிஸ்ரா,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுஆணைய உறுப்பினர் செயலர் திரு.ஜெ.மேகநாத ரெட்டி.இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

இந்த விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் – திரு.தயாநிதி மாறன்அவர்கள் (மத்திய சென்னை), டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்கள்(வடசென்னை), திருமதி த.தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் (தென் சென்னை), சட்டமன்ற உறுப்பினர்கள்டாக்டர் திரு.ப.தாயகம் கவி அவர்கள் (திரு.வி.க.நகர்), திரு.எம்.கே.மோகன் அவர்கள் (அண்ணாநகர்), திரு.த.வேலு அவர்கள் (மயிலாப்பூர்), திரு. ஐட்ரீம் ஆர். மூர்த்தி அவர்கள் (இராயபுரம்), திரு.ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா

அவர்கள் (விருகம்பாக்கம்), மற்றும் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துனணத் தலைவர் டாக்டர். அசோக்சிகாமனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in